அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 158

எனது இல. 543இ. 672டி.
தாபனப் பகுதி,
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7.
1980, பெப்ரவரி மாதம் 05.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க யாக்கத் தலைவர்கள் யாவர்க்கும்.

மதியுரை, மற்றும் நிருவாகச் சபைகளுக்கும் பேராணைக் குழுக்களுக்கும் பெண்களை நியமித்தல்.

---

பெருமளவிற் பெண்கள் சம்பந்தமுற்று விளங்கும் தேசிய முயற்சிகளிற் கூட மதியுரைச் சபைகளிலும் நிருவாகச் சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவேயுள்ளது அல்லது பிரதிநிதித்துவமே இல்லாதுள்ளதென்று மேதகு சனாதிபதிக்கு முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய, மற்றும் சர்வதேச மதியுரைச் சபைகளுக்கும் நிருவாகச் சபைகளுக்கும் பெண்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதற்கு மேதகு சனாதிபதி அவர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளார். எனவே, உங்களின் உள்ளீட்டெல்லைக்குள்ளடங்கும் அத்தகைய சபைகளுக்கு நியமனங்களைச் செய்கையில் பெண்களுக்குப் போதியளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மனத்திற் கொள்க.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஜி. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்.
அரசாங்க நிரு. & உள்நாட்டலுவல் அமைச்சு

ஒப்பமிட்டவர்: எச். டி. ரி. போதிதாசா,
தாபனப் பணிப்பாளர்.